REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

சோவியத் பிரதமர் இமயத்தைக் காண்பார்

புதுடில்லி, நவ. 2—

சோவியத் பிரதமர் புல்கானின் இந்தியா வரும்போது, இமயமலைப் பகுதியை விமானத்தின் மூலம் பார்வையிடுவார் என்று அதிகாரபூர்வமாகத் தெரியவருகிறதாம்.

மலர் 3] சென்னை: ஐப்பசி 16உ புதன் (2—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 17உ வியாழன் (3—11—55) [இதழ் 120

தேசீய ஏடுகளின் பித்தலாட்டம்

'4,000 கழகத் தோழர்கள் காங்கிரசில் சேர்ந்தனர் என்பது பச்சைப் புளுகு!'

'எவரும் கழகத்திலிருந்து விலகவில்லை'

பம்பாய் தி. மு. கழக அறிவிப்பு

தி. மு. கழகம் நாள்தோறும் பெற்றுவரும் மகத்தான வளர்ச்சி, மாற்றார் பலரின் கண்களை உறுத்திய வண்ணமுள்ளது. கழகத்தின் வளர்ச்சியைத் தடுக்க, அடுக்கடுக்கான ஆயுதங்களை ஆட்சிப் பீடத்திலிருப்போரும், அவர்களது ஆதரவாளர்களும் மேற்கொண்டும், பயனில்லாது போகவே, நமது வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த புதுப்புது ஆயுதங்களைத் தேடி அலைகின்றனர்; அவைகளில் ஒன்றுதான், கழகத்தின் நற்பெயருக்கு மாசு கற்பிக்க நினைத்து, பொய்யும், புனைந்துரையும் கொண்ட செய்திகளை ஏடுகள் பல அவ்வப்போது வெளியிட்டுவருவது!

இந்த வகையில் சேர்ந்ததுதான் 'தினமணி' சென்னை 30-10-55 இதழிலும், 'சுதேசமித்திரன்' 31-10-55 இதழிலும், 'பம்பாயில் 4,000 தி. மு. கழகத் தோழர்கள் காங்கிரசில் சேர்ந்தனர்' என்று தலைப்பிட்டு வெளிவந்த செய்திகளும்!

அது குறித்து, பம்பாய் தி. மு. கழகத்தினர் தந்துள்ள விளக்கத்தை, தேசீய ஏடுகள் தெளிவுபெற வேண்டுமென்பதற்காகக் கீழே தருகிறோம்:

"'தினமணி' சென்னை 30—10—55 (வெளியூர்—31—10—55ம் நாள்) இதழில் 'பம்பாயில் 4,000 தி. மு. கழகத் தோழர்கள் காங்கிரசில் சேர்ந்தனர்' என்ற தலைப்பில், கோவில்பட்டி வள்ளிமுத்து அவர்களின் பேச்சைக்கேட்டு, 'பம்பாயிலுள்ள தி. மு. கழகத் தோழர்கள், அனுதாபிகள் 4,000 பேர் இனி காங்கிரசில் சேர்ந்து பணியாற்றுவதாகக் கூட்டத்தில் சபதம் செய்தார்கள்' என்ற செய்தி முற்றிலும் புனைசுருட்டு நிறைந்த பொய்ச் செய்தியாகும்.

"இது குறித்து, 'தினமணி'க்கும் மறுப்புச் செய்தி எழுதி அனுப்பியுள்ளோம்.

'பம்பாயில் தி. மு. கழகம் பெற்றுள்ள வளர்ச்சி கண்டு பொறாமை கொண்ட புசலிட மற்றவர்களின் கயமைச் செயலாலேயே இச்செய்தி வெளியாக்கப்பட்டிருக்கிறது என்பதோடு, இத்தகு இழி செயலாலேயே கட்சியை வளர்க்க வேண்டும் என்ற அவல நிலை கண்டு பெரிதும் வருந்துகின்றோம்.

"பொறுப்பற்ற இப்போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம். இச்செய்தியைக் கண்ட பம்பாய்வாழ் பொது மக்கள், காங்கிரசின் சார்புடையோர் என விளம்பரப்படுத்திக்கொள்ளும் சவகர் வாலிபர் சங்கத்தினரின் கீழ்த்தரப் போக்கைக்கண்டு எள்ளி நகையாடுகின்றனர்.

"பம்பாய் தி. மு. கழகத்தின் எந்தக் கிளையிலுமிருந்தும் இதுவரை ஒரு உறுப்பினர் கூட விலகவில்லை என்பதோடு, பொதுமக்கள் இது போன்ற செய்தித் தாட்களையும்—கட்சியினரையும் வெறுத்தொதுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்,"

என்று, பம்பாய் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் சார்பில் தோழர் த. மு. பொற்கோ அறிவிக்கிறார்.

காஷ்மீர் சிக்கல் - ஒரு தலைவலி!

"காஷ்மீர் சிக்கல், இந்தியா—பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் தலைவலி தரக்கூடியதாகும்; இந்தச் சிக்கலை, இந்திய சர்க்கார், உண்மை நிலைகளை மனதில் கொண்டு அணுகுவரேல் சுலபமாகப் பரிகாரம் தேட முடியும்,"

என்று, பாகிஸ்தான் வெளி விவகார மந்திரி அமீதுல்ஹக் சௌத்ரி தெரிவித்திருக்கிறார்.

இரண்டாம் திட்டம்

சென்னை சர்க்கார் செலவு

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, முதல் ஆண்டில் சென்னை சர்க்கார் தங்களது திட்டங்களுக்காக ரூ 38 கோடி செல

(தொடர்ச்சி 5-ம் கலம் பார்க்க)

நீர்ப்பாசனத் திட்டத்தை ஏற்கச் - செய்ய வரிகொடா இயக்கம்

திருச்சூர், நவ. 1—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தங்களது பூதண்டி நீர்ப்பாசனத் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ளாவிட்டால் தாங்கள் 'நேரடி நடவடிக்கை'யில் ஈடுபடுவதாக திரு—கொச்சி முதன் மந்திரியைச் சந்தித்த நெம்மாரா நகர மக்களின் பிரதிநிதிகளடங்கிய தூதுக் குழுவினர் அச்சுறுத்தியிருக்கின்றனர்.

அவர்களது நேரடி நடவடிக்கை என்பது, வேறு பலவற்றுடன் வரிகொடா இயக்கம் நடத்துவதையும் உள்ளடக்கியதாகும். அவர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்க மறுக்கவும் கூடுமாம்.

திட்டக் குழுவின் யோசனையின் அடிப்படையிலேயே மாநில சர்க்காரிடம் தாங்கள் திட்டம் ஒன்றைத் தந்திருப்பதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நகல் திட்டத்தில் அவர்கள் தாக்கல் செய்த திட்டமும் சேர்க்கப்பட்டிருந்தது என்றும், பின்னர் அது, இறுதிக் கட்டத்தில் கைவிடப்பட்டதாயும் தெரிவிக்கப்படுகிறது.

தங்களது கோரிக்கையைக் கவனிக்க திரு—கொச்சி முதன் மந்திரிக்கு 15 நாள் அவகாசம் தருவதாயும், அதற்குள் அதனை அவர் ஏற்காவிட்டால், தாங்கள் நடவடிக்கையிலீடுபடுவதாயும் தெரிவித்திருக்கின்றனர்.

பண்டிதர் கண்களில் வெள்ளியும் - இரும்பும்

பவநகர், நவ. 1—

குட்ட நோயாளிகள் விடுதி ஒன்றிற்குக் கால்கோள் விழாச் செய்ய பண்டித நேரு இங்கு வந்தார். அப்போது அவரிடம் சாந்து பூசுவதற்காக ஒரு வெள்ளிக் கொத்துக் கரண்டி தரப்பட்டது; அதை எடுத்து உபயோகிக்க சற்று தயங்கிய அவர் 'வெள்ளியில்லாமல்கூட நாம் காலத் தள்ளிவிடலாம்; ஆனால், இரும்பு இல்லாமல் முடியாது' என்று கூறிவிட்டு, அந்த வெள்ளிக் கரண்டியையே உபயோகித்திருக்கிறார்!

மோசடிகளைத் தடுக்க குடியரசுத் தலைவரின் அவசரசட்டம்

நிறுவன சொத்துக்களைப் பாதுகாக்க நிர்வாகிக்கு அதிகாரம்

புதுடில்லி, நவ. 1—

இன்ஷ்யூரன்ஸ் சட்டத்தின் 106-வது பிரிவை விரிவுபடுத்துவதற்கான அவசரச் சட்டம் ஒன்றை குடியரசுத் தலைவர் பிரகடனம் செய்திருக்கிறார்.

இந்தப் பிரிவு, இன்ஷ்யூரன்ஸ் நிறுவன 'டைரக்டர்'கள் தங்கள் சட்ட ரீதியான அதிகாரத்தை தவறான வழிகளில் உபயோகிப்பது பற்றிக் குறிப்பிடுவதாகும்.

குடியரசுத் தலைவரின் பிரகடனம், 'இன்ஷ்யூரன்ஸ் திருத்த அவசரச் சட்டம்' என்று அழைக்கப்படும்.

இந்தச் சட்டப்படி, நிறுவனத்தின் விவகாரங்களில் நேரடியாகத் தொடர்பு கொள்ளாத நபர்கள் சில சந்தர்ப்பங்களில் 'அதிகார துஷ்பிரயோகம் செய்தவர்கள்' என்றும் குற்றம் சாட்டப்படலாம். அத்தகையோர், 'தவறான வழி'களில் நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கோண்ட தொகைக்கும், அவர்களது 'தவறான செய்கை'யினால், இன்ஷ்யூர் செய்பவர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தையும் ஈடுகட்ட ரொக்கமாகவோ, சொத்துக்களாகவோ திரும்பத் தருமாறு நீதிமன்றம் நிர்ப்பந்திக்கக் கூடிய அதிகாரம் சட்ட மூலம் அளிக்கப்படுகிறது.

★

டால்மியாவிற்கு தடையுத்தரவு!

இன்ஷ்யூரன்ஸ் சட்டத்திற்குத் திருத்தமாக, குடியரசுத் தலைவர் பிரகடனம் செய்துள்ள அவசரச் சட்டத்தின்படி, இராமகிருஷ்ணா டால்மியாவிற்கும், இன்னும் பலருக்கும், பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவன நிர்வாகி தடையுத்தரவு ஒன்றை விதித்திருக்கிறார்.

'பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தில் டால்மியாவும், இதரர்களும் நடத்திய மோசடி குறித்து, நீதிமன்றத்தில் தான் தொடரவிருக்கிற வழக்கு முடியும்போது, நிறுவனத்திற்குச் சேரவேண்டிய தொகையை ஈடுசெய்வதற்கு வசதியாக டால்மியாவும், இதரர்களும், தங்கள் பெயரில் வைத்துள்ள சொத்துக்கள் சிலவற்றை அவர்கள் வேறு எவர் பெயருக்கும் மாற்றக்கூடாது,'

—என்று, பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவன நிர்வாகியின் தடையுத்தரவு கூறுகிறது.

இதேபோல தடை உத்தரவு விதிக்கப்பட்டவர்களில், ஷாந்தி பிரசாத் ஜெயின், திருமதி குணநிதி டால்மியா, திருமதி சரஸ்வதிதேவி டால்மியா, ஆர். பி. குஹா, எஸ். என். தூதானி ஆகியோரும் உள்ளனர்.

இராமகிருஷ்ண டால்மியாவின் நிர்வாகத்திற்கு உட்பட்டதெனக் கூறப்படும் பென்னட் கோல்மன் கம்பெனி, பாரத் யூனியன் ஏஜென்சீஸ், ஜெய்ப்பூர் உதயக் ஆகிய நிறுவனங்களுக்கும் இந்தத் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

ஒன்றரை இலட்சம் தொழிலாளருக்கு

ரூ. 65 இலட்சம் போனஸ்

ஆமதாபாத், நவ. 1—

ஆமதாபாத் ஆலைத் தொழிலாளர்கள் சுமார் ஒன்றரை இலட்சம் பேருக்கு 1953-ம் ஆண்டிற்காக சுமார் ரூ. 65 இலட்சம் வரை போனஸ் கிடைக்கிறது.

இதற்கான ஐந்தாண்டு ஒப்பந்தம் ஒன்று அண்மையில் கையெழுத்தானது நினைவிலிருக்கலாம்

ரஷ்யாவிடம் ஆப்கன் நாடு ஆயுத உதவி கோரும்

கெய்ரோ, நவ. 1—

"நாங்கள் விரும்பும் இடத்திலிருந்து எங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வாங்கிக் கொள்வதற்கு எங்களுக்கு உரிமையும், சுதந்திரமும் இருக்கிறது. குறிப்பாக, அண்டை நாடான பாகிஸ்தான் எங்களைத் தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும்போது, நாங்கள் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டுவது அவசியமாயிருந்து வருகிறது. எனவே, நாங்கள் ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்கள் பெற உத்தேசித்திருக்கிறோம்,"

என்று, கெய்ரோவில் உள்ள ஆப்கன் தூதுவரான சலாவுதீன் ஜலாஜெனி தெரிவித்திருக்கிறார்.

(1-ம் கலத்தின் தொடர்ச்சி.)

விட உத்தேசித்திருப்பதாக அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரூ. 38 கோடியில், ரூ 28 கோடி முதலீட்டுச் செலவு என்றும் ரூ. 10 கோடி 'ரெவினியூ' செலவு என்றும் சொல்லப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 2—11—'55 புதன்

ஐயோ! ஒற்றுமையே!

ஊராள்வோர் முதல் உளறு வாயர்கள் வரை, இன்று, 'இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும்' என்று வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் பேசத் தவறுவதில்லை.

குறிப்பாக வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், தாங்கள் மக்களைச் சந்திக்கிற நேரத்தில் எல்லாம் 'ஒற்றுமையைக் காப்பாற்றுங்கள்' என்ற உபதேசம் புரியாமலிருப்பதில்லை.

இந்தியாவின் ஒற்றுமை என்பது மெய்யான ஒரு உருவம் போலவும், அந்த உருவத்தை உருக்குலைக்க எவரோ முற்பட்டிருப்பது போலவும் பேசிவருகின்றனர் — பண்டிதர்கள்!

இந்த வடநாட்டுப் பண்டிதர்களும், அவர்களது தென்னாட்டு 'எடுபிடி'களும், காப்பாற்றப்பட வேண்டியது என்று வர்ணிக்கிற 'ஒற்றுமை', அரசியல் ரீதியாக வெள்ளையரின் ஆதிக்க வலிமையினால் வலிந்து திணிக்கப்பட்ட ஒன்றே அன்றி, மக்களின் உணர்வு பூர்வமாக உருவான ஒன்றல்ல—என்ற உண்மையை, அந்தப் பண்டிதர்கள் தங்களை மறந்த நிலையில் உண்மை பேசும்போது ஒப்புக்கொண்ட சம்பவங்களை நாம் அவ்வப்போது இங்கு சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

அந்த 'அரசியல் ஒற்றுமை' நீடிப்பதில்தான் தங்களுக்கு இலாபம் இருக்கிறது என்பதால், வடநாட்டவர், அந்த 'ஒற்றுமை'யைக் காப்பாற்ற வேண்டும் என்று துடியாய்த் துடிக்கின்றனர்.

'இந்திய ஒற்றுமை' என்பது—அரசியல் ரீதியான ஒரு ஏகாதிபத்திய அமைப்பு என்பதை மறைக்க, இந்திய மக்கள் பூண்டுள்ள 'ஒற்றுமை'—என, அதற்கு உருவமும்—நிறமும் தந்து, விளக்கமும் தர முற்படுகின்றனர், சில பல நேரங்களில்!

அவர்களது கற்பனை உருவமான இந்திய 'ஒற்றுமை'க்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாயும் அவர்கள் அலறுகின்றனர்!

'மொழிவழி அரசு வேண்டும்' என்று எவரேனும் கோரினால், அது, இந்தியாவின் 'ஒற்றுமை'க்குக் கேடு பயக்கும்—என்று பதில் தருகின்றனர்.

'வட்டார மொழிகள் ஆட்சி மொழியாக ஆக்கப்படவேண்டும்' என்று கோரினால், அது 'ஒற்றுமை'க்கு உலைவைக்கும்; எனவே கூடாது என்று பேசுகின்றனர்.

இப்படி இவர்கள் 'ஒற்றுமை'க்குத்தர நினைக்கிற வடிவத்தைக் காணும் நமக்கு, 'ஐயோ! ஒற்றுமையே!' என்று சொல்லத் தோன்றுகிறது.

'மொழி அடிப்படையிலேயே மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற கூச்சலை ஏற்றுக்கொண்டால், அது முன்னேற்றத்தைத் தடுக்கும்; நமைப் பலவீனப்படுத்தும்; இந்தியாவின் 'ஒற்றுமை'யைச் சீர்குலைக்கும்' என்று, டில்லியில் காங்கிரஸ் ஊழியர்களிடையே உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் பேசியிருக்கிறார்.

'பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடிப்போம் — மொழிவழி அரசு அமைப்போம்'—என்று போர் முரசு கொட்டிய காங்கிரஸ் கட்சிக்காரர்தான் அவரும்! இப்போது அவர், 'வடநாட்டு ஏகாதிபத்தியம்' எனும் மாளிகையின் மிகப் பெரிய தூண்! அதன் விளைவு, இந்திய 'ஒற்றுமை' காப்பாற்றப்படுவதற்காக, ஒரு காலத்தில், தனது கட்சியின் மிகப் பெரிய இலட்சியம் — என்று பேசி வந்ததையே மறுத்துரைக்கிறார்.

இன்று மேலிடத்தாராக விளங்கும் பண்டிதர்கள், காங்கிரஸ் மொழிவழி மாநில அமைப்பு வேண்டும் என்று கோரிய காலத்திலும், அங்கு இருந்தவர்கள்தான். அந்த நாட்களில், இப்போது இவர்கள் உபதேசிக்கும் இந்திய 'ஒற்றுமை' பற்றிய 'தீர்க்க தரிசனம்' இவர்களுக்குக் கிடைக்கவில்லையா? அல்லது வெள்ளையர் வெளியேறிய பிறகு, அவர்கள் நிறுவிய அரசியல் 'ஒற்றுமை' வலிமைகுன்றி, வதைபட்டுச் செத்துப்போகும் என்பதை உணர்ந்தேதான், 'மொழிவழி அரசு வேண்டும்' என்ற மக்களின் உள்ளத்தில் நீறுபூத்த நெருப்பாயிருந்த எண்ணத்திற்கு, 'தீர்மானம்' என்ற விசிறி கொண்டு விசிறினார்களா—என்ற கேள்விகளுக்கு, பண்டிதர்கள் பதில் சொல்ல வேண்டும்.

'நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் இந்தி மொழி உயர்தரக் கல்வி போதிக்கும் மொழியாக ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், வட்டாரப் பற்று வளரும்; அது இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்தாக முடியும்' என்று பேசி, தனது மொழி வெறியையும், வடநாட்டவரின் ஆதிக்க நோக்கையும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார் முன்ஷி—உத்திரப் பிரதேச கவர்னர்—ஒருகாலத்திய இந்தியப் பேரரசின் உணவு மந்திரி—தமிழர் பண்பை நாத் துடுக்குடன் இழித்துப் பேசிய ஆரியக் கலாச்சாரப் பாதுகாவலர்!

இந்த முன்ஷியார் பேசிய இடத்திலேயே, இரண்டு நாள் சென்று 'அரிசன்' இதழ் ஆசிரியரான மகன்பாய் தேசாய் என்ற வடநாட்டுக்காரர் பேசியிருக்கிறார்; அவர், இந்தி மொழி புகுத்தப்படுவதால் 'ஒற்றுமை' வளரும் என்பது தவறு—என்று குறிப்பிட்டுவிட்டு, 'மக்களின் ஒற்றுமை உணர்வென்பது, அடிப்படையில் ஒரு மனோநிலை' என்றும் விளக்கம் தந்திருக்கிறார்.

இந்திய 'ஒற்றுமை' பற்றி உபதேசிக்கும் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், இந்த ஆசிரியர் தரும் விளக்கத்தைப் படித்துப் பயன் பெறுவார்களாக!

பொருளாதாரத் துறையில் மக்கள் முன்னேறுததேன்?

உசிலம்பட்டியில் அண்ணு விளக்கம்

24-10-55 மாலை உசிலம்பட்டி சந்தை மைதானத்தில், தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தோழா கே. கருப்பன் தலைமை தாங்கினார்.

தோழர் அ. பொன்னம்பலனார் பேசுகையில், சாதி சமய வேறுபாடுகளும், ஏழை—பணக்காரன் என்ற பொருளாதார ஏற்றத் தாழ்வும் நீங்கி, மக்கள் நல்வாழ்வு பெறுவதற்கு திராவிட நாடு அமைய வேண்டுமென்றார்.

தோழர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் ஒன்றுபட்ட இந்திய அரசியல் அமைப்பில் மாநில அரசினருக்கு விற்பனை வரி, நில வரி ஆகிய இரு வரிகளை வசூலிக்க மட்டுமே அதிகாரம் இருக்கிறதென்றும், மற்ற எல்லா வரிகளையும் டில்லி அரசாங்கமே (இந்திய அரசாங்கமே) வசூலிக்க முழு உரிமையுள்ளதாக இருக்கிறதென்றும், இந்நிலைமை மாறி, மாகாண அரசாங்கம் முழு அதிகாரம் பெற்றுத் திகழ திராவிட நாடு பெற்றால்தான் முடியும் என்றார்.

தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள் பேசியதாவது:—

"8 ஆண்டுகளாகக் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிறது வெள்ளைக்கார ஆட்சியில் மக்கள் வரி செலுத்தியதைவிடப் பல மடங்கு அதிகமாகவே இப்போது வரி செலுத்தி வருகின்றனர். மாகாண அரசினருக்கு தற்போது அதிகாரமும் அதிகம்; இருந்தும், பொருளாதாரத் துறையில் மக்கள் முன்னேறவில்லை.

"மக்கள் வரிப்பணத்தின் பெரும்பாலான தொகை இராணுவத்திற்கும், ஆடம்பரச் செயல்களுக்கும் செலவழிக்கப்படுகிறது.

"விவசாயிகள், ஆலைத் தொழிலாளிகள் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்பட்டு அல்லல் படுகின்றனர். ஆலை முதலாளிகள், அன்று பணம் கொடுத்து காங்கிரசுக் கட்சியை கட்டி வளர்த்து ஆதரித்து வந்தனர். சுதந்திரம் பெற்றபின் அந்த முதலாளிகளே தேவையான நன்மைகளைப்பெற்றுவருகின்றனர். வெளிநாடுகளில் தொடர்பு கொண்டு வாணிபம் செய்து இலாபம் சம்பாதிக்கவும்கூட பெரிய முதலாளிகள் அனுமதி பெற்றிருக்கிறார்கள். ஜவுளி, நூல், பஞ்சு ஆலைகள், காபி, தேயிலை, ரப்பர் தோட்டங்கள், பெரிய பஸ் போக்குவரத்துகள் போன்ற செல்வம் கொழிக்கும் நிறுவனங்கள் அத்தனையும் பெரிய முதலாளிகளிடமேயுள்ளன.

"திரு—கொச்சியிலுள்ள தமிழருக்குச் சொந்தமான பீர்மேடு, தேவிகுளம் தாலுகாக்களை சென்னைக்கே கொடுத்துவிட வேண்டுமென்று கேட்க சென்னை முதலமைச்சர் காமராசர் டில்லிக்குச் செல்கிறார்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது—சென்னை மாகாணத்துக்கு ரூ. 400 கோடி செலவழிக்க வேண்டுமென்று கேட்பதற்கு நிதியமைச்சர் சுப்பிரமணியம் டில்லிக்குச் சென்றுகொண்டிருக்கிறார்.

"இந்நிலைமை மாறி, தென்னாடு முழு அதிகாரம் பெற்று, நல்வாழ்வு வாழ்வதற்கு திராவிட நாடு பெறுவதற்குப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

★

குடந்தையில் அண்ணுதுரை

கும்பகோணம் தமிழ் மன்றச் சார்பில் 30—10—55 காலை 10-30 மணிக்கு மீனாட்சி தியேட்டரில் தோழர் சி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இளைஞர் தமிழ் மன்ற கட்டிட நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் 'மாணவர்கள் எழுச்சி' என்பதுபற்றிப் பேசிய பின், அண்ணுதுரை அவர்கள், 'சமுதாய சீர்திருத்தம்' என்பது பற்றி விரிவுரையாற்றினார்.

நிதிக் குழுத் தலைவர்கள் தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். எஸ் கோவிந்தசாமி அனைவரையும் வரவேற்றனர்.

★

பன்னீர்செல்வம் வாலிபர் சங்கம்

30—10—55 பகல் 12-30 மணிக்கு கும்பகோணம் பன்னீர் செல்வம் வாலிபர் சங்கத்தினர், அண்ணு அவர்களையும், குழுவினரையும் வரவேற்று, மலர்மாலைகள் சூட்டினர்.

சங்கக் கட்டிடத்தின் எதிரில், தி மு கழகக் கொடியை அண்ணு அவர்கள் ஏற்றிவைத்தார்

மற்றும், நகரில் மூன்று இடங்களிலும் அண்ணு அவர்கள் தி. மு கழகக் கொடியை ஏற்றிவைத்தார்

★

தி. மு. கழக மாணவர்கள் கூட்டம்

கும்பகோணம் தி. மு கழக மாணவர்கள் கூட்டம் 30–10–55 மாலை 6 மணிக்கு போர்ட்டர் டவுன் மன்றத்தில் தோழர் டி மதியழகன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் கே. ஏ மதியழகன், அண்ணுதுரை ஆகியவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினை பற்றியும், திராவிட இன எழுச்சி பற்றியும் ஆங்கிலத்தில் விரிவுரையாற்றினர்.

கல்லூரி மாணவர்களும், பொது மக்களும் பெருந்திரளாக வந்து கூடியிருந்தார்கள்.

★

பொதுக்கூட்டம்

கும்பகோணம் அரண்மனைத் தோட்டத்தில் 30—10—55 இரவு 7 மணிக்கு தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நகர தி. மு. கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

மன்னார்குடி தோழர் சுந்தரேசன் அவர்கள் திராவிடப் பண் பாடினார்

தோழர்கள் அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன், சி கிருஷ்ணமூர்த்தி, அண்ணுதுரை ஆகியவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினை பற்றியும், மொழிவழி மாகாணம், ஐந்தாண்டுத் திட்டம் மூலம் தென்னாட்டுக்கு விளைவித்த பாரபட்சம் ஆகியவை பற்றியும் விரிவுரையாற்றினர்.

அமெரிக்காவில் ஏழைகள்!

நீண்டகாலமாகவே முன்னேறாமல் இருக்கின்றனராம்!

"அமெரிக்கா பொதுவில் வெகுவான வளமிகுதி பெற்றிருந்தாலும், ஏராளமான அமெரிக்கர்கள் நீண்டகாலமாக ஏழைகளாயிருந்து வருகின்றனர்,"

என்று அமெரிக்க காங்கிரஸ் ஊழியர் அறிக்கை ஒன்று கூறுகிறதாம்.

பொதுவாக எல்லோருக்கும் முழு நேர வேலை கிடைக்கும் காலங்களில், தொடர்ந்து சில பகுதியில் உள்ளோருக்கு மட்டும் வேலை கிடைக்காமலிருப்பதும், குறைவான வேலை கிடைத்து வருவதுமான நிலை, நீடித்த நவீன சமூகத்தில் உள்ள ஒரு பெரும் முரண்பாடாகும்; தென் மாநிலங்களில் ஏழைகளின் எண்ணிக்கை மிக அதிகமாயிருக்கிறது,"

என்றும், அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டாம் திட்டம் பெரிதாக்கப்படும்

புதுடில்லி, அக் 31—

இரண்டாம் திட்டத்தின் மதிப்பீட்டு அளவு ரூ 4,300 கோடியிலிருந்து ரூ. 5,000 கோடி வரை உயர்த்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

அதிகரிக்கும் திட்டம், இரயில்வே, சமூக சேவை, வெள்ளத் தடுப்பு முதலிய துறைகளுக்கான திட்டங்களுக்கு மேலும் பணம் செலவிட உத்தேசிப்பதாகத் தெரிய வருகிறது.

திட்டம் பெரிதாவதினால் திட்டத்திற்கான நிதி நிலை வளர்ந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை என்றும், ஏற்கனவே திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொகையில் ரூ. 1,000 கோடி வரையில் துண்டு விழுவதாயும், திட்டம் விரிவாகுமானால் துண்டு விழும் தொகையும் ரூ. 1,700 கோடியாக அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

சிங்களவரின் மொழி வெறி!

அனுராதாபுரம்—

"சிங்களம் மட்டுமே அலுவல் மொழியாக்கப்படும் வரை இடைவிடாது போராடுவோம்" என்று இங்கு கூடிய ஆயிரக் கணக்கானோர் உறுதி மேற்கொண்டனராம்.

சிங்கள மன்னன் ஒருவரின் சிலை முன் கூடியிருந்த அவர்கள் உறுதிமொழி மேற்கொள்ளும் வைபவத்தை புத்த சன்னியாசிகள் நடத்தி வைத்தனராம்.

பெரும் மழையையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கானோர் கூடி நின்று இந்த விழாவைக் கண்டு களித்தனராம்.

இந்தி வெறியருக்கு 'அரிசன்' ஆசிரியர் சூடு

"கல்வித் துறையில் மட்டுமின்றி, பத்திரிகைத் துறையிலும் இந்திக்கு அதிகமான இடம் தரப்பட வேண்டும் என சிலர் பூத ஆவேசம் கொண்டு கூறுகின்றனர்.

"அப்படி இந்திக்கு இடம் தருவதால், தேசியம் வளருமென நினைக்கின்றனர்; இந்த விவாதத்திற்கான காரணம் தவறானதாகும்; ஏனெனில், மக்களிடையே ஒற்றுமை உணர்வு ஏற்படுவது என்பது அடிப்படையில் ஒரு மனோநிலையாகும்,"

என்று, காந்தியாரால் நிறுவப்பட்ட 'அரிசன்' என்ற இதழின் ஆசிரியரான மகன்பாய் தேசாய் என்பார், குஜராத் சாகித்திய பரீஷித் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கல்வி முறை வகுக்க...

குடியரசுத் தலைவர் காட்டும் வழி

"நாட்டிற்குச் சரியான கல்வி முறையை வகுப்பதற்கு இந்திய நாகரீகத்திலும், மேற்கத்திய நாகரீகத்திலுள்ள நல்ல அம்சங்களை ஒன்றுபடுத்த முயல வேண்டும்,"

என்று, இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரர், ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆண்டு விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"அந்நிய நாடுகளைச் சேர்ந்த எல்லாவற்றையுமே கண்டிப்பது சரியானதாகாது; நாம் ஏற்பதற்குத் தகுதியுள்ளவைகளையும் ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்வர வேண்டும். ஆனால், இம்முறையைக் கையாளுகையில், நம்முடைய சொந்த நாகரீகத்தை மறந்துவிடக் கூடாது."

ரஷ்யாவின் எதிர் மறுப்பு ?

"அரபுக் கிழக்கில் ஏற்பட்டுள்ள பெரும் பரபரப்புகளுக்குக் காரணம், அந்த நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் மேற்கு நாடுகள் தலையிடுவதுதான்; ஆக்கிரமிப்பு இராணுவ குழுக்களை மேற்கத்தியர் அங்கு ஏற்படுத்தி வருகின்றனர்," என்று, ரஷ்யா புகார் கூறியுள்ளதாம்.

"எகிப்து - செக்கோஸ்லோவேக்கியா—ரஷ்யா இராணுவ ஒப்பந்தமானது, சாதாரண வர்த்தக ஒப்பந்தம்தான்," என்று ரஷ்ய வானொலி அறிவித்ததாம்.

"பல ஆண்டுகளாகத் துருக்கி, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளுக்கு, மேற்கத்திய நாடுகள் ஆயுதங்கள் விநியோகம் செய்து வருகின்றன; அவர்களின் 'இராணுவக் கூட்டில்' சேர்ந்துள்ள நாடுகளுக்கே ஆயுதங்கள் தருவது, அது, இராணுவ ஆக்கிரமிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியே' என்று நினைப்பதற்கு இடம் தருகிறது, என்றும் கூறப்பட்டுள்ளது."

பிரம்மாண்டமான போர்க் கப்பல்கள்

ரஷ்யாவில் கட்டப்படுகிறது?

போருக்குப் பிறகு, ரஷ்யா, சுமார் 150 நாசகாரிக் கப்பல்களையும், மொத்தத்தில் 150 சப்மரீன்களையும் வைத்திருக்கிறதாம்.

உலகில் இதுவரை வேறு எவரும் நிர்மாணித்திராத அளவில், பிரம்மாண்டமான — புதுமாதிரியான போர்க் கப்பல்களை நிர்மாணித்து வருவதாகச் செய்தி ஒன்று கூறுகிறது இந்தக் கப்பல்கள், இதே அளவிலுள்ள அமெரிக்கக் கப்பல்களைவிட 8,000 டன் எடை அதிகமாம்!

ரஷ்யா—யேமன் நட்புறவு ஒப்பந்தம்

முக்கிய குறிக்கோள்கள் பற்றிய விளக்கம்

கெய்ரோ, அக். 31—

செங்கடல் மாநிலமான யேமன் நாட்டுடன், ரஷ்யா நட்புறவு ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டுள்ளது. கெய்ரோவில், இருதரப்புப் பிரதிநிதிகளிடையேயும் ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

கலாச்சாரத் துறையிலும், பொருளாதாரத் துறைகளிலும் இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனைகள் செய்துகொள்ளவும், நல்லுறவு மேற்கொள்ளவும் ஒப்பந்தம் வழிகோலுகிறது.

அரேபியாவுக்கும் — பிரிட்டிஷ் காலனியான ஏடனுக்கும் இடையில் யேமன் நாடு இருக்கிறது.

ரஷ்யாவில் யூ-நூ

சரித்திரபிரசித்திபெற்ற இடங்களைப் பார்வையிடுகிறார்

லண்டன், அக். 31—

இப்போது சோவியத் ரஷ்யவில் சுற்றுப்பயணம் செய்துவரும் பர்மியப் பிரதமர் யூ-நூ, கஜாக குடியரசுத் தலைவர்களுக்குத் தமது குழுவினருடன் வந்து சேர்ந்திருப்பதாக மாஸ்கோ வானொலி தெரிவித்திருக்கிறது.

பாகுவிலிருந்து அவர் வந்தபோது, மத்திய ஆசியாவிலேயே மிகப் பழம்பெரும் நகரங்களுள் ஒன்றான சாமர்கண்டு சென்று, அங்குள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களை எல்லாம் பார்வையிட்டுத் திரும்பினர் என்று தெரியவருகிறது.

அல்மா அதா விமான நிலையத்தில் பர்மிய, சோவியத், கஜக்ஸ்தான் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததாயும், யூ-நூ குழுவினரை அஜக்ஸ்தான் பிரதம மந்திரியும், இதர தலைவர்களும் வரவேற்றனர் என்றும் 'டாஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

உதகையில் செயற்கை மழை ஆராய்ச்சி

சென்னை சர்க்காருக்கு தகவல்

உதகையிலும் அதன் சுற்றுப் பிரதேசங்கள் சிலவற்றிலும் செயற்கை மழை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளில் வெற்றி கிடைத்திருப்பதாகவும், மழை அதிகரிப்பு மூலம் இது தெரிவதாகவும் சென்னை அரசினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

இத்தகைய சோதனைகளை இதர பகுதிகளுக்கும் பரவலாக்குவதற்கு முன்பு, இதன் விளைவுகளைப் பரிசீலனை செய்யும்படி சர்க்கார் யோசனை கூறியிருப்பதாகவும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

★

வரட்சிமேகத்திலிருந்து இயற்கை மழை!

"செயற்கை முறையில் மழையை அதிகரிக்க முடியும். 'வரட்சியான மேகங்கள் மழையைப் பொழிவிக்காது' என்ற கருத்து முன்பு நிலவி வந்தது; ஆனால், ஆராய்ச்சிகள் செய்ததில், அத்தகைய மேகங்களிலிருந்தும் இயற்கை மழையைப் பெய்விக்கலாம் என்று தெரியவந்துள்ளது. அணைகள், நீர்த் தேக்கங்கள் ஆகியவற்றிலுள்ள நீர் ஆவியாக மாறுவதைக் கூடுமான அளவில் குறைப்பதற்கு விஞ்ஞானம். புதுவகைத் துறைகளைக் கண்டு பிடித்திருக்கிறது,"

என்று, ஆஸ்திரேலிய விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர், செயற்கை மழை பிரச்சினை பற்றி, தாம் மேற்கொண்ட ஆராய்ச்சிகளைக் குறித்து விளக்குகையில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னைக்கு இயந்திர வடிகட்டி சாதனங்கள்

தண்ணீரைத் துரிதமாக விநியோகம் செய்யுமாம்

கீழ்ப்பாக்கத்திலுள்ள சென்னை நகராண்மைக் கழக குடிநீர் விநியோக நிலையத்தில், ரூ 25 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்படப் போகும் துரித இயந்திர வடிகட்டி சாதன அமைப்பு கால்கோள் விழாவை, நவ. 14-ந் தேதியன்று, குடியரசுத் தலைவர் இராசேந்திரர் ஆற்றுவார்.

இச்சாதனம் அமைந்த பின்னர், நாளொன்றுக்கு 340 இலட்சம் காலன் தண்ணீர் விநியோகம் செய்யப்பட முடியுமாம். தற்போது, நாளொன்றுக்கு 240 இலட்சம் காலன் தண்ணீர்தான் விநியோகம் செய்யப்படுகிறது. இந்தச் சாதனம் அமைவதால், நகரில் குடிநீர் விநியோகம் அதிகரிக்கும்.

ரூ 10,50,000 செலவில் இரு தண்ணீர் சேமிப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது; 6 மாதத்தில் இவைகள் கட்டி முடிக்கப்படக் கூடும்.

முசோலினியைக் கொன்றவர் மீது

நஷ்ட ஈடு வழக்கு?

10 ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலிய சர்வாதிகாரியான முசோலினியையும், அவரது மனைவி கிளேரெட்டா பெட்டாச்சியையும் பிடித்துக் கொலை செய்ததாக இத்தாலிய கம்யூனிஸ்டு பார்லிமெண்டு உறுப்பினர் வால்டர் ஆடிசோ மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

இவர் மீது, முசோலினியின் மாமனாரும், மாமியாரும், 74 000 பவுனுக்கு நஷ்டஈடு வழக்கு தொடுத்திருக்கின்றனர்.

நாட்டைவிட்டு ஓடிய முசோலினியையும், அவரது மனைவியையும், ஆடிசோ, வட இத்தாலியில் பிடித்துக் கொலை செய்தாராம்.

தங்களது மகளின் பிரேதத்தை அவமானப்படுத்தியதாகவும், தங்களது மகனையும் கொலை செய்ததாகவும் இவர்கள் வழக்கு தொடுத்துள்ளனர்.

சூரிய வெப்பம்

அணுசக்திக்கு முன்பே பயன்படக்கூடும்?

1,000 நிபுணர்கள் ஆராய்வர்

போனிக்ஸ் அரிஸோனா,

அக். 31—

இந்தியா முதலிய 27 நாடுகளிலிருந்து விஞ்ஞானிகள், என்ஜினீயர்கள், கல்வியாளர், தொழிலதிபர் ஆகியோர் 1,000 பேருக்கு மேல் இங்கு நவம்பர் 1-ந் தேதி முதல் 5-ந் தேதிவரை சூரிய வெப்பத்தைப் பற்றி ஆராயும் முதல் உலக மாநாட்டில் கலந்துகொள்ளுகின்றனர்.

இந்த அரிசோனாப் பாலைவனத்தில் வெயிலை மறைப்பதற்கு மேகமோ, புகையோ கிடைப்பது அரிது; எனவே சூரிய சக்தியைப் பற்றிய மாநாட்டுக்கு இது தகுந்த இடமே. இந்தப் பாலைவனத்தில் 100 சதுர மைல் பரப்பளவில் ஒரு நாளின் வெயிலின் சக்தியால் அமெரிக்காவிலுள்ள தொழில்களையெல்லாம் நடத்திவிடலாம் என்பது விஞ்ஞானிகள் கணக்கு.

சூரிய சக்தி இந்த அளவில் வெறுமனே கிடைத்தாலும் அதனைக் கையாளுவது கஷ்டமாகவும், செலவு மிக்கதாகவும் இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதனைக் கையாளுவது எளிதாகவும், மலிவாகவும் ஆக்குவது எப்படி என ஆராய்வதே இந்த உலக மாநாட்டின் நோக்கம்.

அணுசக்திக்கு முன்னதாகவே சூரிய சக்தி பொதுவாகப் பயன்படக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

சூரிய வெளிச்சத்தினுல் இயங்கும்

வானொலிப் பெட்டி!

சிகாகோ, நவ. 1—

சூரிய வெளிச்சத்தைக் கொண்டு இயங்கும் பரிசோதனை வானொலிப் பெட்டி ஒன்று பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறதாம்.

'சாதாரண வானொலிப் பெட்டி போல காட்சிதரும் இப்பெட்டி. இயங்குவதற்குத் தேவையான சக்தியை சூரியன் அல்லது செயற்கை ஒளியிலிருந்து பெற்றுக்கொள்ளுகிறது—அதற்கென உள்ள சில கருவிகளின் உதவியினுல்' என்று கூறப்படுகிறது.

சைப்ரஸ் தீவில் குண்டுமாரி!

சைப்ரசின் முக்கியமான நகரங்களில் எல்லாம் விதிக்கப்பட்டிருந்த 'கர்பியூ' தடையுத்தரவு நீக்கப்பட்ட நான்கு மணி நேரத்திற்குள்ளாக, சைப்ரஸ் தேசிய இயக்கத்தின் தீவிரவாதிகள், பிரிட்டிஷ் துருப்புக்கள் மீதும், இராணுவத் தளங்கள் மீதும் குண்டுமாரி பொழியத் துவங்கினராம்.

பல நகரங்களில் தடை நீக்கப்பட்டதும், இந்த குண்டு பொழியும் சம்பவங்கள் துவங்கின என்றும், சம்பவங்களினுல் எவருக்கும் காயமில்லை என்றும், எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், இந்தத் தீவின் கவர்னரான ஜான் ஹார்டிங், பிரதமர் ஈடனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக லண்டன் பயணமாகியிருக்கிறார்.

சென்னையில் போக்குவரத்து நெருக்கடி

சில புதிய திட்டங்களை அமுலாக்க முயற்சி

பஸ், லாரிகள் வேகம் மணிக்கு 25 மைல்களாகக் குறையும்

சென்னை நகரத்தில் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பதற்கு, சில விதிகளைக் கண்டிப்பாக அமுல் நடத்துவதற்கு அதிகாரிகள் செய்துள்ள சில முடிவுகள் வருமாறு:—

பிராட்வேயில் உள்ள பூங்காவை மோட்டார்களை நிறுத்தும் இடமாக அனுமதிக்கும்படி கோரப்படும்.

ரவுண்ட் டாணவிலுள்ள இரண்டு போக்குவரத்து திட்டுக்களின் பரப்பளவைக் குறைத்து, வண்டிகள்போக்குவரத்திற்கு அதிக இடம் கொடுக்கப்படவேண்டும்.

நடந்து செல்பவர்கள், நடைபாதைகளில்தான் போக வேண்டும்; குறிப்பிட்ட இடங்களில் இருந்துதான் பாதையைக் கடக்கவேண்டும்; முக்கியமான ரோடுகளில் நடைபாதை ஓரமாக 'கிராதி'கள் அமைத்து, எந்த இடங்களில் பாதையின் குறுக்கே மக்கள் நடக்கவேண்டுமோ அந்த இடங்களில் மட்டும் கிராதிகள் போடாமல் விட்டுவிடப்படும். மவுண்ட் ரோடு, பிராட்வே, பைகிராப்ட்ஸ்ரோடு—ஆகியஇடங்களில் உடனடியாக இது அமுல் செய்யப்படவேண்டும்.

மவுண்ட் ரோடில் மூன்று போக்குவரத்து 'வழி'கள் ஏற்படுத்தப்படும்; ஒன்று—சைக்கிள், ரிக்ஷாக்கள், கைவண்டிகளுக்கு; இரண்டு—பஸ்கள், லாரிகளுக்கு; மூன்றாவது—மோட்டார்களுக்கென இருக்கவேண்டும்

இது தவிர்த்த மற்ற ரோடுகளில் இரண்டு போக்குவரத்து 'வழிகள்' இருந்தால் போதும்; ஒன்று—மோட்டார் வண்டிகளுக்கும், மற்றொன்று—இதர வண்டிகளுக்கும் இருக்கவேண்டும்; இந்த விதிகள் கண்டிப்பாக அமுல் செய்யப்படும்.

25 மைல்களுக்கு மேல் வேகமாகச் செல்ல முடியாதபடி பஸ், லாரி ஆகியவைகளில் ஒரு இயந்திரக் கருவியைப் பொருத்துவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

பாதை விதிகளைப் பின்பற்றி நடந்துகொள்வதற்காக மக்களிடை பொதுக் கூட்டங்கள் மூலம் பிரச்சாரம் செய்யப்படும்.

எகிப்து மன்னர்களின் சடலங்கள்

பீகாரில் கண்டுபிடிக்கப்பட்டது

புதுடில்லி, நவ. 1—

எகிப்து நாட்டின் பழங்கால மன்னர்கள், அதிகாரிகள் ஆகியோரின் 'பதம்படுத்தப்பட்ட சடலங்கள்' (மம்மி), பீகார் மாநிலத்திலுள்ள மான்பூம் மாவட்டத்திலிருக்கும் ராஜ்மகால் கல்லறைகளிலும், சந்தால் பர்க்னுஸ் மலைப் பிரதேசங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாம்.

ஈக்களை கொல்ல ரொக்கப் பரிசு!

சீனமுறை பற்றி அமிர்தகௌரி

புதுடில்லி, அக். 31—

டில்லியில் உள்ள ஈக்களைக் கொல்வதற்கு சீனுவில் கையாளப்படும் முறையை தான் மேற்கொள்ளப் போவதாக சுகாதார மந்திரி அமிர்தகௌரி அறிவித்திருக்கிருர்.

ஈக்களின் தொந்தரவை எதிர்ப்பதற்குக் குழந்தைகள் உட்பட மக்கள் எல்லோரும் திரட்டப்படுகிற சீன முறையை அவர் வெகுவாகப் பாராட்டியுள்ளார். அண்மையில்தான் அவர் சீனுவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ளார்.

"தினந்தோறும், ஒவ்வொரு வயது வந்தவர்களும், 20 கொல்லப்பட்ட ஈக்களைக் கொண்டு வந்து 'மேயரி'டம் தரவேண்டும்"

என்று, ஷாங்காயில் விதிக்கப்பட்டதாக தனக்குத் தகவல் தரப்பட்டதாக அவர் தெரிவித்திருக்கிருர்.

குறிப்பிட்டதற்கு மேல் அதிகமான ஈக்கள் கொண்டு வருவோருக்கு ரொக்கப் பரிசம் தரப்படுமாம்.

'ஈக்களைக் கொல்வது, ஜைனர்களுக்குப் பிடிக்காத ஒன்றுயிற்றே?' என்று நிருபர்கள் அமிர்தகௌரியிடம் எடுத்துக் காட்டியபோது, அவர், 'ஜைனர்கள் ஈக்களைக் கொல்ல வேண்டாம்; அவர்கள் வீடுகளில் இதரர்கள் புகுந்து ஈக்களைக் கொன்று கொண்டு வரலாம்' என்று பதில் தந்திருக்கிருராம்!

செய்திச் சுருள்

★

திருக்குறள் வகுப்பு ஆரம்ப விழா

30—10—55 மாலை 4 மணிக்கு, ஆம்பூர் (வ. ஆ. மாவட்டம்) திருவள்ளுவர் கழகச் சார்பில் இந்து உயர்நிலைப் பள்ளியில், திரு. என். எஸ். ராஜன் அவர்கள் தலைமையில் திருக்குறள் வகுப்பு ஆரம்ப விழா நடைபெற்றது. திரு. கு. மு. அண்ணல் தங்கோ திருக்குறள்வகுப்பை துவக்கி வைத்துத் திருக்குறள் குறித்துச் சொற்பொழிவாற்றினுர். பின்னர், திரு. பி சங்கரய்யா, வி. சந்திரநாத நயினுர், ஆர். பார்த்தசாரதி, ஆ. மா. சிவஞானம், வா. சி. சுப்பிரமணியம், எம். ஒ பழனி மகாதேவன், வி. டி. சுப்பராயன், மு. சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் தமது முடிவுரையில், திருக்குறள் வகுப்பிற்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் பொதுமக்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

சென்னை தமிழ் வளர்ச்சி மன்றம்

30—10—55 மாலை 6-30 மணிக்கு, சென்னை, எஸ். என. செட்டி தெரு, எண். 64 இல்லத்திலுள்ள பகுத்தறிவு மன்றக் கட்டடத்தில், தோழர் சி. ஆர். அருச்சனன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், மேற்படி மன்றம் தி. மு கழகக் கொள்கையை முழு மனதுடன் ஏற்று இயங்குவது என்றும், 'பகுத்தறிவு மன்றம்' என்ற பெயர் நீக்கி, 'தமிழ் வளர்ச்சி மன்றம்' என்று மாற்றியமைத்துக் கொள்வது என்றும், மன்றத் தலைவர் திரு டாக்டர் எம். நாராயணசாமி அவர்கள் விளக்கிப் பேசினுர். பின்னர் 'தமிழ் வளர்ச்சி மன்ற' நிர்வாகக் குழுத் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் போ. இராசரத்தினம், செல்வராசன், ப இராசமாணிக்கம், வ. இராசமாணிக்கம் ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

சிங்கப்பூரில் அந்நியர் குடியேற்றம்

'கூடாது' என மார்ஷல் கருத்து

சிங்கப்பூர், அக். 31—

இந்தியாவிலிருந்தும், சீனுவிலிருந்தும் ஏராளமானோர் சிங்கப்பூரில் குடியேறுவதை அனுமதிக்கும் திட்டத்திற்கு சிங்கப்பூர் பிரதம மந்திரியான மார்ஷல் டேவிட் எதிர்ப்பு தெரிவித்திருக்கிருர்.

'தகுநிலைப் பொறுத்து, சீன, இந்திய மக்களை காலனியில் குடியேற அனுமதிப்பது' என்ற தீர்மானம் ஒன்று, ஆளும் கட்சியான தொழிலாளர் கூட்டு முன்னணிக் கூட்டம் ஒன்றில் கொண்டுவரப்பட்டது.

அப்போது பிரதம மந்திரி குறுக்கிட்டு, 'உங்களுக்கெல்லாம் என்ன, பைத்தியமா? சிங்கப்பூர், சிங்கப்பூருக்காகவே இருக்க வேண்டும்; இதர வெளியிடங்களிலிருந்து வருவோர் சிங்கப்பூரில் குடியேற அனுமதிக்கக்கூடாது; இப்போது, இங்கு 20,000 பேர் வேலையின்றிக் கஷ்டப்படுவது உங்களுக்குத் தெரியாதா?" என்று கூறி கேட்டதின் மீது, பிரரேபணை திரும்பப் பெறப்பட்டுள்ளது.

‘தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனி குடியிருப்பு கூடாது’

‘சாதி இந்துக்களுடன் கலந்து வாழ வழி செய்ய வேண்டும்’

அ. இ. தாழ்த்தப்பட்டோர் இயக்கத்தின் தீர்மானம்

ஆமதாபாத், அக். 31—

“தீண்டப்படாதவர்களுக்கென தனிக் குடியிருப்புகள் அமைப்பதை ஒழித்துவிட்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் இதர சாதி இந்துக்களுடன் கலந்து குடியேற வசதி செய்யவேண்டும்,”

—என்று, ‘அகில இந்திய அரிசன சேவா சங்’கின் மத்தியக் கழக கூட்டம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

“தீண்டாமையை ஒழிப்பதற்கு, இம்மாதிரி கலப்புக் குடியேற்றம் வெகுதூரம் பயன்பட முடியும்,”

என்று, அங்கு நிறைவேறியுள்ள தீர்மானம் ஒன்று கூறுகிறது.

“தாழ்த்தப்பட்டவர்களுக்கும், இதர பின்தங்கியவர்களுக்குமென, சர்க்காரோ அல்லது சர்க்கார் உதவியுடனே கட்டப்படும் குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் சுமார் 10 சாதி இந்துக்களும் குடியேற வேண்டும்—தாழ்த்தப்பட்டவர்களுடன் ஒன்றிப் பழக வழி செய்யவேண்டும்—என்று, சர்க்கார் விதி செய்யவேண்டும்,” என்றும் தீர்மானம் கூறுகிறது.

“கோவிலுக்குள் நுழைதல், பொதுக் குளங்கள், கிணறுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், இதர பொது வசதிகளைப் பெறுதல் போன்ற உரிமைகள் தரப்படுவது மட்டுமின்றி, தாழ்த்தப்பட்டவர்கள், தங்களுடைய பொருளாதார, சமூக நிலையை உயர்த்திக் கொள்வதற்காக நிலம் பெறுவதற்கும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்,”

என்றும், வேறொரு தீர்மானத்தில் கோரப்பட்டிருக்கிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் திருவெண்காடு வருகை

7—11—55 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு திருவெண்காடு, மேல வீதியில், தோழர் சீ. கேசவன் தலைமையில் வரவேற்புப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் என். கிட்டப்பா ஆகியோர் பேசுவர்.

கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

கழகக் கூட்டம்

★

பெத்தநாயக்கன்பாளையம்
கோட்டக்கரை மாரியம்மன்
கோவில் மைதானத்தில்
4—11—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : பெ. ப. மாணிக்கம்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எம். பி. சுப்பிரமணியம்
இரா. தாண்டவன்
ஏ. ஆனைமுத்து

திருக்குறள் வகுப்பு

2—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை-புரசை, எண் 100, வேளாளத் தெரு, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

3—11—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் (சென்னை-பெத்து நாய்க்கன்பேட்டை, எண் 10, லாயர் சின்னதம்பி முதலி தெரு) தோழர் ம வ சிவபூஷணம் தலைமையில் நடைபெறும். ‘தமிழரின் பண்பாடு’ என்ற பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

டாமனிலிருந்து 800 பேர் வெளியேறினர்!

வாபி, அக். 31—

போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்குட்பட்ட டாமனிலிருந்து சுமார் 800 பேர்கள் கட்டைவண்டிகள் மூலமாக, இந்திய எல்லைக்குள் வந்து விட்டனர் என்று அதிகாரபூர்வமாகத் தகவல் தரப்பட்டிருக்கிறதாம்.

இவர்களில் 60 சதவிகிதத்தினர் பெண்களும், குழந்தைகளும் ஆவர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களை எல்லாம் இந்தியப் போலீசார் எல்லையில் பிடித்து முகாம்களில் அடைத்துவைத்திருந்தனர் என்றும், அவர்கள் திரும்பவும் டாமனுக்குள் திரும்பி அனுப்பப்படுவார்களா அல்லது கைது செய்யப்படுவார்களா என்பது தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

வந்துள்ள பெண்களில் பலர் தங்களுக்கு டாமனில் உண்ண எதுவும் கிடைப்பதில்லை என்றும் பட்டினி கிடப்பதாகவும், எனவே தங்களைத் திரும்ப டாமனுக்குள் திருப்பி அனுப்பக்கூடாது எனவும் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இரயில்வேக்களில் இலஞ்ச ஒழிப்பு

லால்பகதூர் சாஸ்திரியின் திட்டம்

லக்னோ, அக். 31—

இரயில்வே இலாகாவிற்கு வெளியிலிருந்து அமர்த்தப்படுகிற உயர்தர அதிகாரி ஒருவர் தலைமையில் மத்திய இலஞ்ச ஒழிப்பு இயக்கம் ஒன்றைத் துவக்க இரயில்வே இலாகா திட்டமிட்டிருப்பதாக மந்திரி லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்திருக்கிறார்.

மேலும் ஏழு வட்டாரங்களிலும், இம்மாதிரி இலஞ்ச ஒழிப்பு குழுக்கள் நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாயும், அவர் தெரிவித்திருக்கிறார்.

2,600 இரயில் பெட்டிகள்

இந்தியாவுக்காகப் போலந்தில் தயாரிப்பு

பாரிஸ், அக் 31—

போலந்தில் உள்ள தொழிற்சாலைகளில், இந்தியா தயாரித்துத் தருமாறு கோரியிருந்த 2,600 இரயில் பெட்டிகள் வேகமாகத் தயாரிக்கப்பட்டு வருவதாயும், 1956 அக்டோபர் திங்களில் அவைகள் இந்தியாவுக்கு அனுப்பப்படும் என்றும் தெரிய வருகிறது. இந்தப் பெட்டிகளின் மொத்த மதிப்பு 50 இலட்சம் டாலராகும்

‘கோரிக்கையை விட்டுக் கொடுப்பதற்கில்லை’

திரு-தமிழ்ப்பகுதிகள் பற்றி குஞ்சன் நாடார் உறுதி

சென்னை, நவ 1—

“திரு-கொச்சியில் உள்ள தமிழ் தாலுகாக்களைத் தாய்த் தமிழகத்துடன் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையில் விட்டுக்கொடுப்பதற்கு எதுவும் இல்லை,”

என்று, திரு-தமிழகக் காங்கிரஸ் பிரமுகரான ஏ. குஞ்சன் (நாடார்) எம்.எல்.ஏ., இங்கு தெரிவித்திருக்கிறார்.

“சென்னை சர்க்காரும், காங்கிரசும் இது பற்றி நடவடிக்கை எடுக்கும்போது, நாங்கள் அவர்களுக்குப் பின்னணி பலமாயிருப்போம்; அவர்களது முயற்சி தோல்வியுற்றால் நாங்கள், எங்களது கோரிக்கை ஈடேற்றத்திற்காக, நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவோம்,” என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பத்திரிகையாளரிடம் பேசிய அவர், தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சி - சித்தூர் தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்று கோருவதற்கான காரணங்களை விளக்கியிருக்கிறார்.

ஆச்சரியமாயிருக்கிறதாம்!

ஆக்ரா, அக். 31—

“இந்தியாவில் இயற்கை வளங்கள் ஏராளமாக இருந்தும், இந்திய மக்கள் ஏழைகளாயிருக்கின்றனர்; இதற்குக் காரணம், இந்த வளங்களை உபயோகப்படுத்துவதற்கு மனித உழைப்பு உள்ளிட்ட வசதிகள் மிகக் குறைவாயிருப்பதுதான்,”

என்று, திருமதி துர்க்காபாய் தேஷ்முக், கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

புற்று நோய்க்கு மற்றொரு காரணம்!

பிரிட்டிஷ் டாக்டர்கள் முடிவு?

‘சிகரெட் பிடிப்பதினாலேயே புற்று நோய்கள் உண்டாகிறது,’ என்று, முன்னமேயே டாக்டர்கள் கண்டுபிடித்துக் கூறியுள்ளனர்.

‘தொழிற்சாலைகளின் புகைக் கூண்டுகளிலிருந்து வெளிப்படும் புகையிலுள்ள ‘பென்ஸ்பைரீன்’ என்ற கந்தகத்தாலும், ‘டையாக்சைட்’டினாலும் புற்று நோய் உண்டாகிறது,’ என்று, டாக்டர்கள் இப்போது முடிவு செய்துள்ளனராம்.

பத்திரிகை ஆசிரியர் கைதாகி விடுதலை

பம்பாய், நவ. 1—

‘பிரீ பிரஸ் ஜர்னல்’ என்ற இதழின் ஆசிரியரான எஸ். நடராசன், மற்றும் வெளியிடுபவர்—அச்சிடுபவரான டி என். நட்கர்னி என்ற இருவரும், ஆஜ்மீர் மாநிலத்தில் உள்ள பீவாரைச் சேர்ந்த வழக்கறிஞரான மேஜர் பதேசிங் என்பார் தொடர்ந்திருந்த மான நஷ்ட வழக்கை ஒட்டிக் கைது செய்யப்பட்டு உடன் விடுதலையாகியிருக்கின்றனர்.

கெய்ரோ, அக். 31—

அராபிய நாடுகளிலும், மற்றும் துருக்கி, பாரசீக நாடுகளிலும் உள்ள சோவியத் ரஷ்யாவின் தூதுவர்கள் மத்திய கிழக்கு பகுதியின் அரசியல் நிலை குறித்து கலந்தாலோசிப்பதற்காக சீக்கிரமே மாநாடு ஒன்றில் சந்திப்பர் என்று தெரிய வருகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக காஞ்சியில் சிறப்புக் கூட்டம்

★

இடம் : காஞ்சி கண்ணன் டாக்கீஸ்

நாள்: 6—11—55 ஞாயிறு காலை 10 மணி

பேசுபவர் : **சி. பி. சிற்றரசு**

பொருள் : ‘ஜோன் ஆப் ஆர்க்கும்-ஜூலியஸ் சீசரும்’

கட்டணம் : அணா 8, 4

—நகர தி. மு. கழகம், காஞ்சி

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

இந்து விதவை மறுமணச் சட்டம்

திருத்த வேண்டுமென நீதிபதி கருத்து

மனுதர்ம சாஸ்திரத்திலிருந்து மேற்கோள்

சென்னை, அக். 31—

“இந்து விதவைகள் மறுமணச் சட்டத்தின் 2-வது பிரிவு, இன்றைய நிலைமைக்கு முரணாக உள்ளது; எனவே அதைத் திருத்தவேண்டும்.

“இறந்துபோன கணவனின் சொத்தில் மனைவிக்கு பங்கு உண்டு என்பதை கிறுத்துவர்கள், முஸ்லிம்கள் ஆகிய பிற சமூகத்தினர் எல்லாம் ஒப்புக்கொள்கின்றனர். கணவன் இறந்த பிறகு, மனைவி ஒழுங்கு தவறி நடந்தால் கூட, கணவனின் சொத்தை அனுபவிப்பதற்கு உரிமை இருக்கிறது; இந்த நிலையில், மறுமணம் செய்துகொண்ட இந்து விதவைக்கு மட்டும், ஏன் இந்தத் தடை இருக்கவேண்டும்?

“சட்டத்தின் முன்னர் எல்லாக் குடிமக்களும் சரிசமம் என்று இந்திய அரசியல் சட்டம் உறுதியளித்திருப்பதுடன், மதம், இனம், சாதி அல்லது பால் (ஆண்—பெண்) காரணமாக வேற்றுமை பாராட்டக்கூடாது—என்று விதி செய்திருக்கும்போது, ஏழை இந்து விதவை மட்டும் இவ்வித வேற்றுமைக்கு உட்படுத்தப்பட்டு—அவள் மறுமணம் செய்துகொண்டாள் என்ற காரணத்துக்காக—முன்னைய கணவனின் சொத்தில் அப்பெண்மணி உரிமை கோருவதற்கு ஏன் தடை செய்ய வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.”

—என்று, சென்னை நகர சிவில் நீதிமன்ற முதன்மை நீதிபதி பி. ஷெர்புதீன் அவர்கள் வழக்கொன்றில் தீர்ப்புக் கூறுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்து விதவை மீண்டும் மணம் புரிந்துகொள்ளலாம் என்பதைப் பழங்கால இந்து மதச் சட்டத் தொகுப்பாளர்கள் அனுமதித்திருந்தனர் என்பதைக் காட்டுவதற்காக நீதிபதி ஷெர்புதீன், மனு, நாரதிய தர்மசாஸ்திரம் முதலியவைகளிலிருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்டினார்.

“இறந்துபோன கணவனின் சொத்தில் மனைவிக்கும் பங்கு உண்டு; ஆனால், அவள் மீண்டும் திருமணம் செய்துகொண்டால் அந்த உரிமை கிடையாது,” என்பதுதான், இந்து விதவைகள் மறுமணச் சட்டத்தின் 2-வது பிரிவாகும்.

வழக்கின் விவரமாவது :—

மோகனும்பாள் என்ற பெண்மணி, இயற்கை எய்திய தன்னுடைய முன்னைய கணவரின் சொத்தில் ஐந்தில் ஒரு பகுதி தரப்பட வேண்டுமென்று முன்னைய மாமனார், மாமியார், மைத்துனர்கள் ஆகியவர்கள்மீது வழக்குத் தொடுத்தார்.

வாதி, தனது வழக்கில், தன் முதல் கணவர் இயற்கை எய்திய பின்னர், அக்குடும்பத்தினர் தன்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டதாகவும், ஆகவே, தான், பின்னர் மறுமணம் செய்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

வழக்கை தள்ளுபடி செய்வதாகக் கூறிவிட்டு, நீதிபதி அவர்கள் தமது தீர்ப்பில் குறிப்பிட்டதாவது :—

“இந்த வழக்கில் எழுந்துள்ள கேள்வி, இந்து விதவை மறுமணம் செய்துகொண்ட பின்னர், அவருடைய முன்னைய கணவரின் சொத்தில் அந்தப் பெண்மணிக்கு உள்ள உரிமை பற்றியதாகும்; இது, இந்து விதவைகளைப் பற்றிய முக்கிய பிரச்சினையுமாகும்.

“இவ்வழக்கில், தன்னுடைய கணவனுடைய மரணத்திற்குப் பின்னர், விதவைப் பெண் மறுமணம் செய்து கொண்டுள்ளார்; இப்பொழுதுள்ள சட்டத்தின்படி, மறுமண விதவைக்கு, முதல் கணவன் சொத்தில் உரிமை இல்லாதிருப்பதால், வழக்கை தள்ளுபடி செய்கிறேன்.

“ஆனால், சமூகம் இன்றுள்ள நிலைமையிலும், ‘எல்லோருக்கும் சம உரிமை’ என்ற அரசியல் அமைப்பின் உத்திரவாதத்தை முன்னிட்டும், சட்டத்தின் 2-வது பிரிவை தகுந்தவாறு மாற்ற வேண்டும்.”

உண்மைதானா?

மெஹ்மதாபாத், அக். 31—

“ஏழ்மையையும், வேலையின்மையையும் எப்படி ஒழிப்பது என்பதுதான் இப்போது இந்தியாவை எதிர்நோக்கும் கேள்வியாகும்; வேலை இல்லாதவர் என்று சொல்ல எவருமே இருக்கக் கூடாது.

“சீக்கிரமே நாம், அறியாமையையும், ஏழ்மையையும், வேலையின்மையையும் ஒழிக்க ஒரு பெரும் திட்டத்தை அமுல் செய்யவிருக்கிறோம். மக்கள் கடினமாக உழைத்தாலன்றி அந்தத் திட்டம் வெற்றிபெற முடியாது.

“அந்தத் திட்டத்தின் பலன்களைக் குறிப்பிட்ட ஒரு மாநிலம்தான் அனுபவிக்கும் என்பதல்ல—நாடு முழுவதும் அனுபவிக்கப்போகிறது,”

என்று, பண்டித நேரு, கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.